

தமிழ்நாடு மாணவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றி உயர்கல்வி கற்கும் அளவிற்கு உயர்த்தி மாணவர்கள் சமுதாய நலனை காப்பாற்றி வருபவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று திண்டுக்கல் அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்ப் புதல்வன் திட்டத் துவக்கவிழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு தமிழ்ப் புதல்வன் திட்டத்தை துவக்கி வைத்து மாணவர்களுக்கு அதற்கான அடையாள அட்டையை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, துணைத்தலைவர் ராஜேஸ்வரி, கிழக்கு மாவட்ட தி.மு.க. துணை செயலாளர் பிலால்உசேன் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் மேல்விஷாரம் அரசு மருத்துவமனைக்கு ‘தி நேஷனல் அசோசியேஷன்’ சார்பில் ரூ. 1,75,000 மதிப்பீட்டில் உபகரணப் பொருட்கள் வழங்கும் விழாவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சியர் யூ.சந்திரகலா, நகர மன்ற தலைவர் எஸ்.டி.முகமது அமீன், சவுகார், முன்னாபாய், ஆர்.முஹம்மத் அய்யுப். தலைவர், தி நேஷனல் வெல்ஃபர் அசோசியேஷன் ஜி.முஹம்மத் ஃபஹிம், ஏ.முஹம்மத் தமிழ் கே.முஹம்மத் இத்ரீஸ், முஹம்மத் ஹாஷிம், ஒய்.அப்துல் ஹலீம், அன்சர், பாஷா, நிஷாத், அஹமத், ஜனாப் அல்ஹாஜ், பாக்கினி, இர்பான், அகமது சாஹிப், முத்தவல்லி அஹ்லே, சுன்னத், லபாபீன், ஜமாத், மேல்விஷாரம், ஜனாப் அல்ஹாஜ், இப்திகார் அகமது, சாஹிப், ஜனாப் அல்ஹாஜ், சௌகார் அயாஸ், அகமது சாஹிப் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

### ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு

# சேவை வழங்க உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 10 -

ஹஜ் யாத்ரீகர்களுக்கு உதவிட ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் மக்களவை உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



இது குறித்து அவர் எழுப்பிய கேள்வி வருமாறு:

வேலூர் நாடாளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த ஹஜ் யாத்ரீகர்களுக்கு உரிய உதவிகள் சேவைகளை வழங்குவதற்கு உதவி மையங்களுக்கு வசதிகள் செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

அவ்வாறு இருப்பின் அதன் விவரங்கள்? வெளிநாடுகளுக்கு குறிப்பாக அரபு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணம் செய்யும் பெருமளவிலான மக்களுக்காக ஒன்றிய அரசு ஏதேனும் விசேட கடவுச்சீட்டு மற்றும் தூதரக சேவைகளை ஆரம்பித்துள்ளதா? அதன் விபரம் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு சிறுபான்மையினர் விவகார அமைச்சர் கிரன் ரிஜிஜு எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

ஹஜ் தொடர்பான செயல்முறைகளின் டிஜிட்டல் மயமாக்கல் அதிகரித்து வருவதால் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ளவர்கள் உட்பட இந்தியா முழுவதும் உள்ள ஹஜ் யாத்ரீகர்களுக்கு ஏராளமான சேவைகள் டிஜிட்டல் முறையில் ஆன்லைனில் வழங்கப்படுகின்றன.

ஹஜ்விண்ணப்பங்களை ஆன்லைனில் தாக்கல் செய்தல் எஸ்எம்எஸ்/ஹஜ் கமிட்டி ஆஃப் இந்தியா இணையதளம் மூலம் நிகழ்நேர தகவல்களைப் பரப்புதல், சிறந்த மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக யாத்ரீகர்களின் மருத்துவப் பதிவுகளை ஆன்லைனில் புதுப்பித்தல் மற்றும் ஹஜ் சுவிதா செயலி குறைதீர்க்கும் ஒரு வசதியான ஊடகம். யாத்ரீகர்கள் பயிற்சி உள்ளடக்கம் தங்குமிடம் தொடர்பான விவரங்கள் விமானம் சாமான்கள் ஆகியவை அடங்கும்.

செயல்முறைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான இந்திய ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் ஹஜ் யாத்ரீகர்களுக்கு அதிக எளிதாகவும் வசதிக்காகவும் வழிவகுத்தன.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து ஹஜ் யாத்ரீகர்களுக்கும் பயிற்சி அளிக்க இந்திய ஹஜ் கமிட்டியால் மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஹஜ் 2024க்காக வேலூரில் 248 ஹஜ் யாத்ரீகர்களுக்கு 23.04.2024 அன்று பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. பிரத்யேக ஹெல்ப்லைன் போன்ற கூடுதல் வசதி சேவைகளும் இந்திய ஹஜ் கமிட்டியால் செயல்படுத்தப்படுகின்றன. இது வேலூர் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து வரும் ஹஜ் யாத்ரீகர்கள் உட்பட அனைத்து இந்திய ஹஜ் யாத்ரீகர்களுக்கும் அணுகக்கூடிய வகையில் உள்ளது.

வெளிநாட்டில் உள்ள இந்தியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு என்பது அரசாங்கத்தின் மிக உயர்ந்த முன்னுரிமையாகும். வெளிநாடுகளில் உள்ள நமது பிரஜைகளின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வலுவான நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதற்கு ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள்/பதவிகள் இந்தியர்கள் எழுப்பும் எந்தவொரு பிரச்சினைக்கும் முன்னுரிமை அடிப்படையில் பதிலளிக்கின்றன. அழைப்புகள் வாக்இன்கள் மின்னஞ்சல்கள் சமூக ஊடகங்கள் 24x7 ஹெல்ப்லைன்கள் MADAD போர்ட்டல் போன்ற பல்வேறு சேனல்கள் மூலம் குறைகள் பதிலளிக்கப்படுகின்றன. வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு புகார்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் நடத்தும் அரசாங்கத்திடமும் எடுத்துக் கொள்ளப்படும். இருக்கும் தேவையான நடவடிக்கைக்கு. எங்களின் பணிகளும் பதவிகளும் விழிப்புடன் இருப்பதோடு இந்தியர்களின் நலனை உன்னிப்பாகக் கண்காணிக்கின்றன. ஏதேனும் அசம்பாவித சம்பவம் நடந்தால் அந்த சம்பவம் முறையாக விசாரிக்கப்பட்டு உரிய முறையில் தீர்வு காணப்படுவதை உறுதிசெய்ய புரவலன் நாட்டின் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் உடனடியாக எடுத்துச் செல்லப்படுகிறது. மேலும் அவசரகால அல்லது நெருக்கடியான சூழ்நிலைகளின் போது வெளிநாடுகளில் உள்ள எங்கள் பணிகளானது.

தூதரக உதவி உணவு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் துன்பப்படும் / சிக்கித் தவிக்கும் இந்தியப் பிரஜைகளுக்கு தீவிரமாக உதவிடவும் தங்குமிடம் மருந்து மற்றும் இந்தியாவிற்கு திரும்பிச் செல்ல வழிவகை செய்கிறது.

ஹஜ் யாத்ரீகர்களுக்கு வசதியாக இந்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒரு சுற்றறிக்கையை வெளியிடுகிறது.

இந்தியாவில் உள்ள அனைத்து பாஸ்போர்ட் வழங்கும் அதிகாரிகளும் (PIAs) இதர அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

வருங்கால ஹஜ் யாத்ரீகர்களிடமிருந்து பெறப்பட்ட பாஸ்போர்ட் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் வருங்கால ஹஜ் விண்ணப்பதாரர்களுக்கு பல்வேறு வழிகளில் தேவையான உதவிகளை வழங்குவது இதில் அடங்கும்.

அதாவது தேவைக்கேற்ப ஒரு நோடல் அதிகாரியை நியமித்தல் வசதிகளைத் திறப்பது உட்பட கவுண்டர்கள் அத்தகைய ஹஜ் விண்ணப்பதா ரர்களுக்கான சந்திப்பு இடங்களை முன்பதிவு செய்தல் மற்றும் கலந்துகொள்வது அத்தகைய குடிமக்களிடமிருந்து உடனடியாக பெறப்பட்ட கோரிக்கைகள்/குறை மனுக்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் குறிப்பிட்டுள்ளார்.

### வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா:

# சிறுபான்மை மக்களின் சொத்துகளைக் கைப்பற்றுவதே மோடி அரசின் நோக்கம்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஆக. 10 -

வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதா கொண்டு வரும் மோடி அரசின் நோக்கம், சிறுபான்மை இஸ்லாமிய கிறிஸ்துவ மக்களின் சொத்துகளை கொஞ்சம் கொஞ்சமாக கைப்பற்றுவதே ஆகும் என ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இதுகுறித்து 9.8.2024 தேதிய ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

நாடாளுமன்ற மக்களவையில், வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்ற அலுவல் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ தாக்கல் செய்துள்ளார். இந்த சட்டத் திருத்த மசோதாவிற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பரிசீலனைக்கு இந்த மசோதா அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நரேந்திரமோடி தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி அரசு சிறுபான்மை இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக தொடர்ந்து தாக்குதல் தொடுத்து வருகிறது. அதனொரு பகுதியாகவே, வக்பு வாரிய சட்டத் திருத்த மசோதாவும் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்திருத்த மசோதா, அரசியல் சட்டம் வழங்கியுள்ள மத சுதந்திரத்திற்கு எதிரானது; மாநி லங்களின் உரிமையை பறிக்கக் கூடியது; கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது; மக்களை மத ரீதியாக பிளவு படுத்துவது என்று இந்தியா கூட்டணிக் கட்சிகள் கடுமையான குற்றச்சாட்டுக் களை மக்களவையில் முன்வைத்துள்ளன.

மோடி அரசின் நோக்கம், வக்பு வாரியத்தில் நிலவும் குறைபாடுகளைக் களைவது அல்ல; மாறாக, இஸ்லாமிய மக்களுக்குச் சொந்தமான சொத்துக்களை கொஞ்சம் கொஞ்சமாக அவர்களிடமிருந்து கைப்பற்றுவதே ஆகும். இந்த சட்டத் திருத்த மசோதா குறித்து இஸ்லாமிய அமைப்புகளிடமோ, மதத் தலைவர்களிடமோ, மாநில அரசுகளிடமோ எந்தவிதமான ஆலோசனையும் மேற்கொள்ளாமல் தானடித்த மூப்பாக கொண்டு வரப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையை கலைக்க வேண்டும் என்றும், கோவில் மற்றும் சொத்துக்களை இந்துக்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும் பா.ஜ.க. கூப்பாடு போடுகிறது. கோவில் சொத்துக் களை கொள்ளையடிப்பதற்காகவே இவ்வாறு கோருகிறார்கள். கோவில் அறங்காவலர்களாக இந்துக்கள் மட்டுமேநியமிக்கப்படுகிறார்கள். ஆனால், ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள வக்புவாரிய சட்டத் திருத்தத் தின்படி முஸ்லிம் அல்லாதவர்களும் வக்புவாரியத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

குஜராத்தில் சிறுபான்மை இஸ்லாமிய மக்களைக் கொன்று குவித்தது பா.ஜ.க. பரிவாரம். இப்போதும் உ.பி. உள்ளிட்ட மாநிலங்களில் சிறுபான்மையோர் புல்டோசர் அச்சத்திற்கு மத்தியில் தான், வாழ வேண்டியுள்ளது. மறுபுறத்தில், குடியுரிமைத் திருத்தச் சட்டம், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை துண்டு துண்டாக உடைத்தது, அரசியல் சட்டத்தின் 370 ஆவது பிரிவை ரத்து செய்தது என இஸ்லாமியர்களின் குடியுரிமை, அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமை என அனைத்திலும் கைவைக்கிறது மோடி அரசு.

விலைவாசி உயர்வு, வேலையின்மை போன்ற பிரச்சனைகளிலிருந்து மக்களது கவனத்தை திசை திருப்பி மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்துவதே மோடி அரசின் நோக்கமாக உள்ளது. மதச்சார்பற்ற சக்திகள் அனைத்தும் தொடர்ந்து இணைந்து போராடியாக வேண்டும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### அயலக தி.மு.க. குவைத் தளபதி பேரவை சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி!

## பட்டுக்கோட்டை சரவணன் ஏற்பாட்டில் நிர்வாகிகள் பங்கேற்று அஞ்சலி!

குவைத், ஆக. 10 -

அயலக திராவிட முன்னேற்றக் கழகம் குவைத் தளபதி பேரவை சார்பாக, நவீன தமிழகத்தின் தந்தை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியையொட்டி குவைத் பாலிவுட் உணவகத்தில் நடைபெற்ற நிகழ்வில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன், ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் தோழர்கள் அம்மையப்பன் செல்வம் செயலாளர், மண்டலம் மதிவாணன் முதன்மைச் செயலாளர், தலைமை நிலைய செயலாளர் சிவக்குமார், பழனி நல்லரசு அமைப்புச்செயலாளர், போத்தியப்பன் அமைப்பாளர்,

கலை, இலக்கிய அணி செயலாளர் அருவிக்கவி ஆனந்த ரவி, ஆலோசகர்கள் மதுக்கூர்பிரேம் , சர்தார் கான், ராமலிங்கம், தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் ஆறாம் பண்ணை சேக், பொறியாளர் அணி செயலாளர் பேட்டை பிலால், கொள்கைப் பரப்பு செயலாளர் அன்பழகன், சிறுபான்மை அணி செயலாளர் கொளத்தூர் ஃபெரோஸ் கான் மக்கள் தொடர்பு செயலாளர் காரை பாண்டியன்,

தொழிலாளர் அணி செயலாளர் விஸ்வநாதன், செந்தில்குமார், தமீம் அன்சாரி , சதீஷ்குமார் செய்யது, ராஜா சாதிக்அலி, அப்துல் ரகுமான் முருகேசன் சாமிநாதன் முகமது யூசுப்,மீனவர் அணி செயலாளர் ஆரோக்கியசாமி, தமிழ்ச்செல்வன் அறந்தை முரளி, முருகன், கணேசன், அய்யா சரவணன், முருகேசன் சார்பு அணி நிர்வாகிகளும் கூட்டணி கட்சியான வி.சி.க. கா.மீ அன்பரசன் மகிழன் செல்லத்துரை,

த.மு.மு.க., ம.ஜ.க., இந்திய தேசிய காங்கிரஸ்,இந்திய கம்யூனிஸ்ட் ராஜேந்திரன், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், செந்தில்குமார், ம.தி.மு.க., இப்ராகிம், முன்னாள் பொருளாளர் பீர்முகமது பகுதிச் செயலாளர் அன்வர்,மண்ணை விஜய், துணைச் செயலாளர் மாயவரம் ராஜா, அலாவுதீன் வலங்கைமான் விஜய குமார், கணேசன், பெருமாள், இனிக்கும் தமிழ் ரபீக் ராஜா, ரமேஷ், ஜாகிர் உசேன், பால்ராஜ், மாயவரம் விஜய், வெங்கடேசன் நவீன தமிழகத்தின் தந்தை முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திரளானோர் கலந்துகொண்டு அனைவரும் மறைந்த தலைவர் கலைஞருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.



அயலக திராவிட முன்னேற்றக் கழகம் குவைத் தளபதி பேரவை சார்பாக, நவீன தமிழகத்தின் தந்தை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியையொட்டி குவைத் பாலிவுட் உணவகத்தில் நடைபெற்ற நிகழ்வில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் தோழர்கள் அம்மையப்பன் செல்வம், மண்டலம் மதிவாணன், சிவக்குமார், பழனி நல்லரசு, போத்தியப்பன், அருவிக்கவி ஆனந்த ரவி, ஆலோசகர்கள் மதுக்கூர்பிரேம் , சர்தார் கான், ராமலிங்கம், ஆறாம் பண்ணை சேக், பொறியாளர் அணி செயலாளர் பேட்டை பிலால், அன்பழகன், கொளத்தூர் ஃபெரோஸ் கான், காரை பாண்டியன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### வெளிநாட்டில் கல்வி பயிலச் செல்லும் இந்திய மாணவர்களுக்கு

# தனி சிறப்பு உதவி மையங்கள் நிறுவ எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, ஆக. 10-

“வெளிநாட்டில் கல்வி கற்கச் செல்லும் இந்திய மாணவர்களுக்கான தனி சிறப்பு உதவி மையங்களை நிறுவிட ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?” என்றும், “கடந்த ஐந்தாண்டுகளில் வெளிநாட்டிற்கு கல்வி கற்கச் சென்ற இந்திய மாணவர்களிடமிருந்து இந்திய தூதரகங்கள் பெற்ற புகார்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?” என்றும் தி.மு.க உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கேள்விகளை எழுப்பினார்.



அதற்கு பதிலளித்த ஒன்றிய வெளியுறவுத்துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் “வெளிநாட்டில் கல்வி கற்கச் செல்லும் இந்திய மாணவர்களுக்கான ‘தனி சிறப்பு உதவி மையங்கள்’ எதையும் இதுவரை ஏற்படுத்தவில்லை எனவும், கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 3,472 இந்திய வெளிநாட்டு மாணவர்கள் உதவி கோரி இந்திய தூதரகங்களை அணுகியுள்ளனர்” எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் “வெளிநாட்டில் படிக்கும் இந்திய மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன் என்பது இந்திய அரசின் முதன்மையான முன்னுரிமைகளில் ஒன்றாகும். வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் சேர்ந்துள்ள இந்திய மாணவர்களுடன் வழக்கமான தொடர்புகளைப் பேணுகின்றன. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் சேரும் புதிய இந்திய மாணவர்கள், வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளில் பங்கேற்க அடிக்கடி அழைக்கப்படுகிறார்கள். இந்திய மாணவர்கள் மற்றும் இந்திய மாணவர் சங்கங்களுடன் தொடர்ந்து தொடர்பு கொள்வதற்காக, அந்தந்த நாடுகளின் அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கும் மூத்த தூதரக அதிகாரிகள் வருகை தருகின்றனர்.

வெளிநாட்டில் உள்ள இந்திய தூதரகங்கள் உயர் படிப்புக்காக வெளிநாடு செல்லும் இந்திய மாணவர்களை தங்களிடம் பதிவு செய்ய ஊக்குவிக்கின்றன. இதனால் அவர்களின் குறைகள் மற்றும் நிலுவையில் உள்ள சிக்கல்களை விரைவாகத் தீர்த்து வைக்க முடியும்.

காலவரையறையில் உரையாற்ற வேண்டும். வெளிநாட்டில் உள்ள இந்திய தூதரகங்கள் இந்திய மாணவர்களைதொடர்ந்து இணைந்திருக்க ஊக்குவிப்பதோடு, முன்னுரிமை அடிப்படையில் அவர்கள் எதிர்கொள்ளும் நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு பதிலளிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கின்றன. தொலைபேசி அழைப்புகள், மின்னஞ்சல்கள் மூலம் பெறப்படும் மாணவர்களின் குறைகளுக்கு 24x7 அவசரகால உதவி எண்கள் மூலம் கிட்டத்தட்ட நிகழ்நேர அடிப்படையில் பதிலளிக்கப்படுகின்றன.

வெளிநாட்டில் உள்ள இந்திய மாணவர்களிடமிருந்து பெறப்படும் எந்தவொரு புகாரும் சம்பந்தப்பட்ட மாணவர்கள் பயிலும் பல்கலைக்கழகத்துடன் இந்திய தூதரகங்கள்உடனடியாக தொடர்புகொண்டு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்கின்றன” எனவும் தெரிவித்துள்ளார்.